வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, மார்ச் - 2020
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, March - 2020

FWC

| தரம் :- 12 (2021) | 21 | T | I,II | பொருளியல் | நேரம் :- மூன்று மணித்தியாலம் 10 நிமிடம் |
|---|---|---|---|---|---|

## பகுதி I

**அறிவுறுத்தல்கள்**

- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**
- **சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து தரப்படுகின்ற பல்தேர்வு விடைத்தாளில் சரியான கூட்டினுள் புள்ளடியிடுக.**

01. கோட்பாட்டு ரீதியாக பின்வருவனவற்றுள் எது நேர்கூற்றுக்கு உதாரணமாகும்.
   1) இலங்கையின் வருமானப் பரம்பலானது நியாயமற்ற தொன்றாகும்.
   2) பண நிரம்பலுக்கும் பொது விலை மட்டத்திற்குமிடையே நேர் தொடர்பு காணப்படும்.
   3) இலங்கையில் தங்கத்தின் விலை அதிகரித்துள்ளது.
   4) வீட்டுத்துறையினரும் நிறுவனத்துறையினரும் தனித்தனி தீர்மானங்களை மேற்கொள்வர்.
   5) இலங்கையின் பொருளாதாரச் செயற்பாடுகளை மொத்த ரீதியாக ஆய்வு செய்யும் நடவடிக்கை.

02. இரண்டு பண்ட உற்பத்திகளிலும் ஒரே வகையான தொழிநுட்பம் பயன்படுத்தப்படுமாயின்
   1) உற்பத்தி சாத்திய வளையி குழிவாக அமையும்.
   2) கிடையச்சுப்பண்ட உற்பத்தியை அதிகரிக்கும் போது நிலைக்குத்து பண்டத்தின் அமையச் செலவானது அதிகரிக்கும்.
   3) ஒரு பண்ட உற்பத்தி அதிகரிப்பிற்காக விட்டுக்கொடுக்கப்படும் அளவு மாறாதிருக்கும்.
   4) உற்பத்தியின் பொருட்டான அமையச் செலவு குறையும்.
   5) உற்பத்தியின் பொருட்டு அமையச்செலவு பூச்சியமாகும்.

03. பின்வருவனவற்றுள் எது நிலையான மூலதனமாகும்.
   1) குறைவேலைப் பொருட்கள் 2) இயற்கை மூலதனம் 3) தொழிற்சாலைகள்
   4) வங்கி வைப்புக்கள் 5) அருமையாகவுள்ள வளங்கள்


04. உற்பத்தி வளங்களின் உடமை தனியாருக்கு இருந்தாலும் கூட வளப்பயன்பாடு தொடர்பாக அதிகளவு தாக்கத்தை அரசாங்கம் மேற்கொள்ளும் பொருளாதாரம்.
   1) சந்தைப் பொருளாதாரமாகும்.
   2) கலப்புப் பொருளாதாரமாகும்.
   3) சமவுடமை சந்தைப் பொருளாதாரமாகும்.
   4) சமூக சந்தைப் பொருளாதாரமாகும்
   5) முதலாளித்துவப் பொருளாதாரமாகும்.

05. ஒரு நாட்டின் உற்பத்தி சாத்திய வளையி முன்னரிலும் பெரிய அளவிலான வலப்புறப் பெயர்ச்சிக்குக் காரணமாக அமைவது எது?
   1) தொழிநுட்ப முன்னேற்றம் 2) வளங்கள் அதிகரிக்கப்படுதல்
   3) வளங்களின் ஏற்றுமதி 4) முகாமைத்துவ வளர்ச்சி
   5) மூலதனப்பண்ட உற்பத்தி அதிகரிப்பதுடன் தொழிநுட்பமும் முன்னேற்றமடைதல்

06. தனிநபர் கேள்வியில் செல்வாக்குச் செலுத்தாத காரணி பின்வருவனவற்றுள் எது?

1) மெய்வருமானம் 2) தொடர்புடைய பண்டங்களின் விலை
3) நுகர்வோனின் எண்ணிக்கை 4) எதிர்பார்க்கைகள்
5) குறிப்பிட்ட பண்டத்தின் விலை அதிகரித்தல்

07. கீழ்வரும் வரைபடத்திற்குரிய கேள்விச்சார்பு




1) $Qd = 100 - 2P$
2) $Qd = 100 - 5P$
3) $Qd = 100 + 5P$
4) $Qd = 20 + 5P$
5) $Qd = 20 - 5P$

08. $Qd = 800 - 10P$ என்பது மின்குமிழ் ஒன்றிற்கான கேள்விச் சமன்பாடாகும். ரூபா 50 விலையில் மின்குமிழின் விலைக்கேள்வி நெகிழ்ச்சி யாது?

1) $-0.66$ 2) $1.66$ 3) $-1.44$ 4) $-2.0$ 5) $-1.66$

09. நிறுவனம் ஒன்று தனது வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் பொருளின் விலையினைக் குறைக்கின்றதாயின்

1) நிறுவனம் கேள்வி நெகிழ்வற்ற பண்டத்தை உற்பத்தி செய்ய வேண்டும்.
2) நிறுவனம் கேள்வி நெகிழ்வுள்ள பண்டத்தை உற்பத்தி செய்தல் வேண்டும்.
3) நிறுவனம் கேள்வி பூரணநெகிழ்வுள்ள பண்டத்தை உற்பத்தி செய்தல் வேண்டும்.
4) நிறுவனம் அலகு நெகிழ்வுள்ள பண்டத்தினை உற்பத்தி செய்தல் வேண்டும்.
5) நிறுவனம் பூரண நிரம்பல் நெகிழ்வுள்ள பண்டத்தை உற்பத்தி செய்தல் வேண்டும்.

10. நிறுவனம் ஒன்றின் நிரம்பல் வளையியை வலப்புறம் நகர்வடையச் செய்யும் காரணிகளில் ஒன்று.

1) நிறுவனத்தின் எல்லைச் செலவு அதிகரித்தல்.
2) பொருளின விலை உயர்வடைதல்.
3) மெய்வருமானத்தில் ஏற்படும் ஓர் வீழ்ச்சி
4) பொருளின் விலை எதிர்காலத்தில் அதிகரிக்கும் எனும் எதிர்பார்ப்பு
5) கூட்டு நிரம்பல் பொருளின் விலை உயர்வு

11. பொருளொன்றின் வருமான விளைவு – 40 அலகாகவும் பதிலீட்டு விளைவு – 10 ஆகவும் அமையுமாயின் அப்பண்டம்.

1) சாதாரண பண்டமாகும் 2) இழிவுப் பண்டமாகும் 3) கிபன் பண்டமாகும்
4) அத்தியவசியப் பண்டாகும் 5) நுகர்வுப் பண்டமாகும்

12. பண்டமொன்றின் கேள்வி நிரம்பல் சமன்பாடுகள் முறையே $Qd = 1000 - 25\,P\,, Qs = -600 + 25P$ என்பனவாகும். பண்டத்தில் ஆகக்கூடிய கேள்விவிலை மற்றும் ஆகக் குறைந்த நிரம்பல் விலை என்பன.

| | ஆகக்கூடிய கேள்வி விலை | ஆகக் குறைந்த நிரம்பல் விலை |
|---|---|---|
| 1) | ரூபா 15 | ரூபா 32 |
| 2) | ரூபா 32 | ரூபா 15 |
| 3) | ரூபா 40 | ரூபா 24 |
| 4) | ரூபா 28 | ரூபா 14 |
| 5) | ரூபா 40 | ரூபா 28 |

13. பொருளொன்றின் கேள்விச்சார்பு $Qd = 600 - 10P$ எனவும் சமநிலைவிலை 40 ரூபா எனவும் கருதுக. பொருளினது கேள்வி வளைகோட்டின் ஆகக்கூடிய விலை மாறாநிலையில் ஒரு ரூபா விலை வீழ்ச்சியடைந்தால் 20 அலகு தொகை அதிகரிக்கும். இந்நிலையில் 40 ரூபா விலையில் ஆரம்ப நுகர்வோர் மிகை, புதிய நுகர்வோர் மிகை என்பன முறையே


| | ஆரம்ப நுகர்வோர் மிகை | புதிய நுகர்வோர் மிகை |
|---|---|---|
| 1) | ரூபா 2000 | ரூபா 4000 |
| 2) | ரூபா 4000 | ரூபா 2000 |
| 3) | ரூபா 2000 | ரூபா 2500 |
| 4) | ரூபா 3000 | ரூபா 4500 |
| 5) | ரூபா 2000 | ரூபா 2000 |

14. சந்தையில் பண்டமொன்றிற்கான கேள்வி நிரம்பல் சார்புகள் $Qd = 800 - 10P, QS = -200 + 10P$ எனத் தரப்படுகின்றது. பொருளின் மீது ரூபா 10 அலகு வரி விதிக்கப்படுமாயின் நுகர்வோர் உற்பத்தியாளர் செலுத்தும் அலகு வரியின் பங்களிப்பு யாது?

| | நுகர்வோர் பங்களிப்பு | உற்பத்தியாளர் பங்களிப்பு |
|---|---|---|
| 1) | ரூபா 5 | ரூபா 2 |
| 2) | ரூபா 3 | ரூபா 5 |
| 3) | ரூபா 5 | ரூபா 5 |
| 4) | ரூபா 10 | ரூபா 5 |
| 5) | ரூபா 5 | ரூபா 10 |

15. $Qd = 700 - 5P, Qs = -200 + 10P$ எனும் சார்பு கொண்ட பொருளொன்றின் 200 அலகுக்கான மிகைக்கேள்வி விலை யாது?
1) ரூபா 50 2) ரூபா 60 3) ரூபா 40 4) ரூபா 100 5) ரூபா 80

16. பண்டம் ஒன்றின் நிரம்பல் மீது அலகு வரி விதிக்கப்படுவதனை கீழ்வரும் வரைபு காட்டுகின்றது.




வரி விதிப்பினால் சந்தையில் ஏற்படும் விளைவுகளில் சரியானது?

| | நுகர் வோன் மிகை | சமூக நல இழப்பு |
|---|---|---|
| 1) | ரூபா 250 வீழ்ச்சி | ரூபா 250 |
| 2) | ரூபா 800 வீழ்ச்சி | ரூபா பூச்சியம் |
| 3) | ரூபா 250 வீழ்ச்சி | ரூபா பூச்சியம் |
| 4) | ரூபா 100 அதிகரிப்பு | ரூபா 80 |
| 5) | ரூபா 120 | ரூபா 20 |

17. குறையும் எல்லை விளைவு விதி (Law of Diminishing Returns) செயற்படும் போது.
   1) எல்லை உற்பத்தி, மொத்த உற்பத்தி, சராசரி உற்பத்தி என்பன வீழ்ச்சியடையும்.
   2) எல்லை உற்பத்தி வீழ்ச்சியடையும் சராசரி உற்பத்தி அதிகரிக்கும்.
   3) எல்லைச் செலவு அதிகரிக்கும், சராசரி உற்பத்தி வீழ்ச்சியடையும்.
   4) எல்லை உற்பத்தி அதிகரிக்கும் மொத்த உற்பத்தி குறைந்த வேகத்தில் அதிகரிக்கும்.
   5) எல்லை உற்பத்தி, சராசரி உற்பத்தி என்பன குறைவடையும் மொத்த உற்பத்தி குறைவடையும்.

18. ஆடைக் கைத்தொழில் நிறுவனமொன்றின் செலவுகள் தொடர்பாக பொருளியலாளர் ஒருவரது அறிக்கை வருமாறு.

| | **செலவு விபரம்** | **தொகை மில்லியன்** |
|---|---|---|
| 1) | மூலப்பொருள் கொள்வனவு | 45 000 |
| 2) | தொழிலாளர்களுக்கான சம்பளங்கள் | 30 000 |
| 3) | சொந்த முயற்சிக்கான இலாபங்கள் | 8 000 |
| 4) | வங்கிக் கடனுக்கான வட்டி | 5 000 |
| 5) | முயற்சியாளன் இழந்த வட்டி வருமானம் | 5 000 |
| 6) | கட்டடத்திற்கான வாடகைக் கொடுப்பனவு | 7 000 |

நிறுவனம் 140 மில்லியன் அலகுகளை 100 ரூபா அலகு விலையில் விற்பனை செய்கின்றது. மேற்படி தரவுகளின்படி சரியான சேர்க்கை எது?

| | **வெளிப்படைச் செலவு** | **பொருளியல் செலவு** | **பொருளியல் இலாபம்** |
|---|---|---|---|
| 1) | ரூபா 40,000 | ரூபா 100,000 | ரூபா 40,000 |
| 2) | ரூபா 87,000 | ரூபா 100,000 | ரூபா 40,000 |
| 3) | ரூபா 100,000 | ரூபா 87,000 | ரூபா 50,000 |
| 4) | ரூபா 100,000 | ரூபா 40,000 | ரூபா 87,000 |
| 5) | ரூபா 87,000 | ரூபா 40, 000 | ரூபா 100,000 |

19. நிறைபோட்டி நிறுவனமொன்றின் உச்ச இலாப வெளியீட்டின்போது ரூபா 125,000 மொத்த வருமானத்தை நிறுவனம் பெறுவதுடன் 25 000 ரூபா நட்டத்தினையும் அடைகிறது. வெளியீட்டின் போது ரூபா 100 சராசரி மாறும் செலவினையும் 125 ரூபா எல்லைச் செலவினையும் கொண்டுள்ளது. நிறுவனத்தின் மொத்தச் செலவு சராசரி நிலையான செலவு என்பன முறையே.
   1) மொத்தச் செலவு ரூபா 150,000, சராசரி நிலையான செலவு ரூபா 50.
   2) மொத்தச்செலவு ரூபா 150,000, சராசரி நிலையான செலவு ரூபா 100.
   3) மொத்தச் செலவு ரூபா 100,000, சராசரி நிலையான செலவு ரூபா 50.
   4) மொத்தச் செலவு ரூபா 100,000, சராசரி நிலையான செலவு ரூபா 150.
   5) மொத்தச் செலவு ரூபா 150,000, சராசரி நிலையான செலவு ரூபா 70.

20. அளவுத்திட்ட விளைவு விதி என்பது.
   1) நிறுவனம் ஒன்றின் உள்ளீடுகளில் ஏற்படும் மாற்ற வீதத்திற்கும் அதன் வெளியீட்டு மாற்ற வீதத்திற்கும் இடையிலான விகிதமாகும்.
   2) உள்ளீடுகளின் சகல விலைமாற்ற வீதத்திற்கும் வெளியீட்டு வீதத்திற்குமிடையிலான விகிதம்.
   3) உள்ளீடுகளில் ஏற்படுகின்ற மாற்றத்திற்கேற்ப வெளியீட்டு வீதாசாரம் அமைதல்.
   4) நிறுவனமொன்றின் சகல மாறும் உள்ளீட்டு விகிதாசார மாற்றத்திற்கும் வெளியீட்டு விகிதாசார மாற்றத்திற்குமிடையிலான தொடர்பினை விளக்குதல்.
   5) எல்லை பதிலீட்டு விகிதத்திற்கும் எல்லை தொழிநுட்ப விகிதத்திற்குமிடையிலான தொடர்பினை விளக்கும் விதியாகும்.

## பகுதி II

❖ **அறிவுறுத்தல்.**

**உபபகுதி "அ" இலிருந்து இரண்டு வினாக்களையும், உபபகுதி "ஆ" விலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.**

### உப பிரிவு 'அ'

➢ **இப்பகுதியிலிருந்து இரண்டு வினாக்களை மட்டும் தெரிவு செய்க.**

*01.* i) "அருமை" என்பதனை விளக்குக? *(3 புள்ளிகள்)*

ii) அருமை, தெரிவு, அமையச் செலவு என்பவற்றுக்கிடையிலான தொடர்பினை விளக்குக? *(4 புள்ளிகள்)*

iii) பொருளியலில் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகள் எவை? அவை ஏன் தோன்றுகின்றன? *(4 புள்ளிகள்)*

iv) "மீளும் வளங்கள்", "மீளா வளங்கள்" என்பவற்றிற்கு தலா இரண்டு உதாரணம் தந்து விளக்குக? *(6 புள்ளிகள்)*

v) விலை முறையின் தொழிற்பாடுகள் எவை? *(3 புள்ளிகள்)*

*02.* i) உற்பத்தி சாத்திய வளையி என்பதனை எவ்வாறு வரையறுப்பீர்? *(4 புள்ளிகள்)*

ii) அதிகரிக்கும் அமையச் செலவுடைய உற்பத்தி சாத்திய வளைகோட்டின் உதவியுடன் பின்வருவனவற்றை விளக்குக?

அ) வினைத்திறனற்ற கைத்தொழில் ஒன்றைத் தனியார் மயமாக்குதல். *(2 புள்ளிகள்)*

ஆ) கைத்தொழில் உற்பத்தியொன்று பொருளாதாரப் பின்னடைவை எதிர்நோக்குதல். *(2 புள்ளிகள்)*

இ) சர்வதேச வர்த்தகத்தின் மூலம் ஒரு நாட்டின் நுகர்ச்சி மட்டம் அதிகரித்தல். *(2 புள்ளிகள்)*

iii) பொருளாதார வளங்களை எவ்வாறு வரையறுப்பீர்? அதனை எவ்வாறு வகைப்படுத்தலாம்? *(5 புள்ளிகள்)*

iv) முயற்சியாண்மை என்பது எவ்வாறு உழைப்பிலிருந்து வேறுபடுகின்றது. *(5 புள்ளிகள்)*

*03.* i) பயன்படுகேள்வி கொண்டிருக்கக்கூடிய மூன்று முக்கிய காரணிகள் எவை? *(3 புள்ளிகள்)*

ii) மேலிருந்து கீழ்நோக்கிச் சரிந்து செல்லும் எளிய நேர்கோட்டுக் கேள்வி வளையியின் பொதுச் சமன்பாட்டினை விபரிக்குக? *(4 புள்ளிகள்)*

iii) கிபன் பண்டமொன்றின் விலைக்கேள்வி வளையி கீழிருந்து மேலாக சரிவது ஏன்? *(4 புள்ளிகள்)*

iv) நெகிழ்வற்ற கேள்வி (Inelastic demand) யுடைய பொருளின் விலை உயர்வடையுமாயின் நெகிழ்ச்சி எவ்வாறு மாற்றமடையும் விளக்குக? *(5 புள்ளிகள்)*

v) விலைக்கேள்வி நெகிழ்ச்சி எக்காரணிகள் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது? *(4 புள்ளிகள்)*

## உப பிரிவு 'ஆ'

➢ **இப்பகுதியிலிருந்து இரண்டு வினாக்களை மாத்திரம் தெரிவு செய்க.**

04. i) ''ஆகக்கூடிய கேள்வி விலை'' ''ஆகக் கூடிய கேள்வித் தொகை'' மற்றும் ''ஆகக் குறைந்த நிரம்பல் விலை'', '' ஆகக் குறைந்த நிரம்பல் தொகை'' என்பவற்றை வரைபில் காட்டுக? (5 புள்ளிகள்)

ii) அரிசிக்கான விலைக்கேள்வி நெகிழ்வற்றதாகவும், ஆடைக்கான விலைக்கேள்வி நெகிழ்வுடையதாகவும் கருதுக. அரசு அலகு வரியொன்றினை இப்பொருட்கள் மீது விதிப்பதனால் ஏற்படும் தாக்கங்களை விளக்குக? (5 புள்ளிகள்)

iii) சந்தையில் விற்பனை செய்யப்படும் பண்டமொன்றிற்கான கேள்வி நிரம்பல் சார்புகள் தரப்படுகின்றன.

$$Qd = 450 - 10P$$

$$Qd = -550 + 15P$$

அ) சந்தையில் பொருளுக்கான சமநிலை விலை யாது? சமநிலை அளவு யாது? (2 புள்ளிகள்)

ஆ) சந்தையில் விற்கப்படும் பண்டத்தின் அலகொன்றிற்கு அரசு ரூபா 10 அலகு மானியம் வழங்குமாயின் நுகர்வோன் செலுத்தும் விலை, உற்பத்தியாளருக்குக் கிடைக்கும் விலை என்பவற்றைத் தருக? (4 புள்ளிகள்)

இ) அரசு மானியம் வழங்கியமையினால் நுகர்வோர் மிகையில் ஏற்பட்ட மாற்றம் எவ்வளவு? (4 புள்ளிகள்)

05. i) நிறைபோட்டி நிறுவனமொன்றின் கேள்வி வளையி கிடையச்சிற்குச் சமாந்தரமாக அமைவது ஏன்? விளக்குக? (4 புள்ளிகள்)

ii) நிறைபோட்டி நிறுவனம், தனியுரிமை போட்டி நிறுவனம் ஆகியவற்றுக்கிடையே காணப்படும் ஒத்த பண்புகளைப் பட்டியலிடுக? (2 புள்ளிகள்)

iii) தனியுரிமைச் சந்தையில் நிறுவனமொன்று புதிதாகப் பிரவேசிப்பதை தடைசெய்யும் இயற்கை மற்றும் செயற்கைத் தடைகள் எவை? (2 புள்ளிகள்)

iv) நிறைபோட்டி நிறுவனம் ஒன்றின் எல்லை வருமானம் (MR) மற்றும் எல்லைச்செலவு (MC) என்ற பதங்களை வேறுபடுத்துக? (4 புள்ளிகள்)

v) நிறைபோட்டி நிறுவனமொன்று பொருளியல் இலாபம் உழைக்கும் நிலையினை வரைபடம் ஒன்றின் மூலம் விளக்குக, (4 புள்ளிகள்)

vi) நிறைபோட்டி நிறுவனமொன்றின் வெளியீடு மற்றும் செலவுகள் தொடர்பான தரவுகள் பின்வருமாறு.

| **விடயம்** | **தொகை ரூபா** |
|---|---|
| அசாதாரண இலாபம் | 2500 |
| எல்லைச் செலவு | 50 |
| ஓரலகுக்கான மாறும் செலவு | 40 |

நிறுவனத்தின் வெளியீடு 500 அலகுகளாயின் சராசரி நிலையான செலவு (AFC) யாது? (4 புள்ளிகள்)

06. i) உற்பத்தித் தொழிற்பாட்டில் "குறுங்காலம்" "நீண்ட காலம்" என்பவற்றை விளக்குக?
(4 புள்ளிகள்)

ii) "அளவுத்திட்டச் சிக்கனம்" என்பதனை எவ்வாறு விளக்குவீர்? (4 புள்ளிகள்)

iii) குறுங்கால சராசரிச் செலவுகளில் எல்லை விளைவு விதி எவ்வாறு செல்வாக்குச் செலுத்தும் என்பதனை விளக்குக? (4 புள்ளிகள்)

iv) நிறவனம் ஒன்றினது வெளியீடு 1500 அலகுகளாகவும் சந்தை விலை 150 ரூபாவாகவும் உள்ளது. நிறுவனத்தின் பொருளியல் இலாபம் 25000 ரூபாவாகவும் உற்பத்தியாளர் மிகை 95000 ரூபாவாகவும் அமையுமாயின்.

அ) நிறுவனத்தின் மொத்த மாறும் செலவு யாது? (2 புள்ளிகள்)

ஆ) நிறுவனத்தின் சராசரி நிலையான செலவு (AFC) யாது? (3 புள்ளிகள்)

v) குறுங்காலத்தில் எல்லைச் செலவானது அதிகரித்துச் செல்வதற்குரிய காரணத்தினை விளக்குக? (3 புள்ளிகள்)